



# Voice of Jagadguru


advaitam paramanandam an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்



ஒருவன் தனக்கு சுகம் வந்தாலும் துக்கம் வந்தாலும் ஒரே மாதிரி இருக்க வேண்டும்..துக்கம் வந்தால் அழுவோம்..ஒரே மாதிரி இருக்க வேண்டும் என்றால் சுகம் வந்தாலும் அழுது கொண்டிருக்க வேண்டுமா.? இவ்வாறு விபரீதமாக அர்த்தம் செய்து கொள்ளக்கூடாது.. சுகத்திலும் துக்கத்திலும் நம் மனது சஞ்சலப்படக் கூடாது என்பதுதான் பகவான் கூறிய உபதேசத்தின் தாத்பர்யம்.. சிலபேர் சுகம் அதிகமாக வந்துவிட்டால் தலைகால் தெரியாமல் குதிப்பார்கள்.. சிறிய துக்கம் வந்தாலும் வானமே தலையில் விழுந்தாற்போல் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.. இந்த இரண்டு பாவனைகளுமே தவறானவை தான்.. நம்முடைய சுகமும் துக்கமும், இறைவனின் ஸங்கல்பத்தினால்தான் என்ற எண்ணத்துடனிருந்து, அதிக மகிழ்ச்சி, அதிக துக்கம் போன்றவற்றில் இருந்து விடுதலை பெற வேண்டும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## நீதிசதகம்

वहति भुवनश्रेणीं शेषः फणापलक स्थितां कमठपतिना मद्ये पृष्ठं सदा स चधार्यते ।
तं अपि कुरुते क्रोडा अधीनं पयोधिः अनादरात् अहह । महतां निस्सीमानः चरित्र विभूतयः ॥

வஹதி பு$^4$வனஶ்ரேணீம்’ ஶேஷ: ப$^2$ணாபலக ஸ்தி$^2$தாம்’ கமட$^2$பதினா மத்$^3$யே ப்ரு’ஷ்ட$^2$ம்’ ஸதா$^3$ ஸ சதா$^4$ர்யதே |
தம்’ அபி குருதே க்ரோடா$^3$ அதீ$^4$னம்’ பயோதி$^4$: அநாத$^3$ராத் அஹஹ . மஹதாம்’ நிஸ்ஸீமான: சரித்ர விபூ$^4$தய: ||

ஆதிசேஷன் தட்டையான குடைபோன்ற தனது சிரஸில் பூமித்தொகுப்புகளை சுமக்கிறான். ஆமையரசன் தனது முதுகின் மத்தியில் ஊன்றியிருக்கும் (மந்தர) மலையைச் சுமக்கிறது. அந்த ஆமையும் அது சுமக்கும் பாரத்தையும் ஸமுத்ரம் மிக லாவகமாகத் தாங்குகிறது. மனோபலமுள்ள உத்தமர்களின் எல்லையில்லாத செயலாற்றல்கள் தான் (சக்திகள்) என்னே! வியக்கத்தக்கது.

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

न्यायागतस्य द्रव्यस्य बोद्धव्यौ द्वावतिक्रमौ ।
अपात्रे प्रतिपत्तिश्च पात्रे चाप्रतिपादनम् ॥

ந்யாயாக3தஸ்ய த்3ரவ்யஸ்ய போ3த்3த4வ்யௌ த்3வாவதிக்ரமௌ |
அபாத்ரே ப்ரதிபத்திஶ்ச பாத்ரே சாப்ரதிபாத3னம் ||



நல்லவழியில் ஸம்பாதித்த பொருள் தன்னைவிட்டு விலகுவதற்கு இரண்டு காரணங்கள் என்பதை புத்திமான்கள் உணரவேண்டும். ஒன்று அயோக்யனுக்கு தானம் செய்வது மற்றொன்று நல்லவர்களுக்கு கொடாமலிருப்பது.

द्वावम्मसि निवेष्टव्यौ निषेव्यौ गले बध्वा डढां शिलाम् ।
धनवन्तमदातारं दरिद्रं वातपस्विनम् ॥

த்3வாவம்மஸி நிவேஷ்டவ்யௌ நிஷேவ்யௌ
க3லே ப3த்4வா ட3டா4ம்' ஶிலாம் |
த4னவந்தமதா3தாரம்' த3ரித்3ரம்' வாதபஸ்வினம் ||


இரண்டு பேர்களை கழுத்தில் கடினமான கல்லைக்கட்டி ஜலத்தில் போடவேண்டும். ஒருவன் பணமிருந்தும் தானம் செய்யாமலிருப்பவன். மற்றொருவன் தரித்திரனாய் இருந்து மந்திர ஜபங்களைச் செய்யாமலும் ஸ்தோத்திரம் முதலியவைகளைப் படிக்காமலும் இருப்பவன்.

द्वाविमौ पुरुषव्याघ्र सूर्यमण्डल भे  दिनौ ।
परिव्राढ्योग युक्तश्च रणेचा भिमुखो इतः ॥

த்3வாவிமௌ புருஷவ்யாக்4ர ஸூர்யமண்ட3ல பே4 தி3னௌ |
பரிவ்ராட்4யோக3 யுக்தஶ்ச ரணேசா பி4முகோ2 இத: ||


ஓ புருஷச்ரேஷ்டனே, இந்த இரண்டு பேர்களும் சூரிய மண்டலத்தை தாண்டிக்கொண்டு செல்வார்கள். அதில் ஒருவர் தியான யோகத்துடன் கூடிய யதி, மற்றொருவர் யுத்தத்தில் பின்புறம் காட்டாமல் எதிர்த்து யுத்தம் செய்து மரித்தவர்.

(தொடரும்....)



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்


An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

### நமது குருநாதர்

மற்றும் ஸநாதன தர்ம பிரச்சாரத்திற்காகவும் வேதாந்தப் பிரச்சாரத்திற்காகவும் பல பத்திரிகைகளைத் துவக்கி வைத்தார்கள். தமிழில் மிகவும் பிரபலமான “ஸ்ரீ சங்கரகிருபா” என்ற பத்திரிகைக்குப் பெயர் சூட்டி வைத்ததும் அவரே. முதன் முதலில் 1959ல் இப்பத்திரிகை வெளிவர ஆரம்பித்து இன்று 30 வருடங்கள் முடிகின்றன. 1961ல் ஆந்திராவில் யாத்திரை செய்து கொண்டிருந்த போது அப்பத்திரிகை தெலுங்கிலும் ஆரம்பிக்கப்பட்டு அதற்கும் 28 வருடங்கள் பூர்த்தியாகின்றன. அதன் பிறகு கன்னடத்திலும் அப்பத்திரிகையை ஆரம்பித்து வைத்தார். அதற்கும் 26 வருடங்கள் முடிகின்றன. இவ்வருடம் மலையாளத்திலும் அப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எப்பாடுபட்டாவது மக்களுக்கு கடவுள் பக்தியும் தர்மத்தில் ஈடுபாடும் நேர்மையான வாழ்க்கையும் அமைய நாம் செயல்பட வேண்டும் என்ற குறிக்கோளுடனேயே இப்பத்திரிகைகள் அவரால் துவக்கி வைக்கப்பட்டன.



சிருங்கேரி மடத்தில் அதன் அபிவிருத்திக்காக அவர் மேற்கொண்ட காரியங்கள் கணக்கிலடங்கா. பக்தர்களுக்கு இங்கு வசதிகள் எவ்வளவு குறைவாக இருந்தன என்பது முன்னாளில் அநேகம் பேர்களுக்கு நினைவிருக்கலாம். நம் குருநாதரின் முயற்சியால் ஏற்பட்ட இப்போதிருக்கும் வசதிகளைக் கொண்டு, ஒரே சமயத்தில் 1000 யாத்ரீகர்களைக்கூட வரவேற்க முடியும்.

இத்தருணம் அவருடைய மற்றொரு இயல்பையும் நான் நினைவுகூர விரும்புகிறேன். "நம் கடமையை நாம் செய்ய வேண்டும். பலனை நாமே அனுபவிக்க விரும்பக் கூடாது. மற்றவர்கள்தான் பலன் அடைய வேண்டும்" என்று சொல்வார். தாம் அமைத்த தென்னந்தோப்புக்களையும் நிறுவிய கட்டிடங்களையும் பற்றிக் கூறும்போது, "இத்தனை தென்னை மரங்கள் வைத்து இருக்கிறேன். அதன் பலனை நான் அடைய வேண்டுமென்ற நோக்குடன் அதைச் செய்யவில்லை. வேறு யார் வேண்டுமானாலும் பயனடையட்டும். அதேபோல்



நான் வசிக்க வேண்டி இக்கட்டிடங்களை உருவாக்கவில்லை. இங்கு வரும் பக்தர்களுக்காகவே அவை கட்டப்பட்டன" என்பார்.

நம் குருநாதர் ஓர் ஆஸ்பத்திரி நிறுவி அதைப் பார்வையிட அடிக்கடிச் செல்வார் என்று பல தடவைக் கூறி இருக்கிறேன். அங்கு போவது தம் வைத்தியத்துக்காக அல்ல. என்னென்ன அபிவிருத்திகள் செய்யலாம் என்று கண்டுகொள்ளவே செல்வார். பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்ய வேண்டியது என்பதே அவர் குறிக்கோளாயிருந்தது. ஸ்ரீ மலஹானிகரேசுவரர் ஆலய புனருத் தாரணம் மற்றொரு உதாரணம். அந்த சிறு குன்றில் செய்யப்பட்ட அற்புத மாறுதல்கள் நம்மை வியப்படையச் செய்கின்றன.

இவையெல்லாம் நம் குருநாதரின் தீர்க்க தரிசனத்தையும் விசால மனப்பாங்கையுமே காட்டுகின்றன. இதே போல் மணிக் கணக்கில் அவர் சாதனைகளை நான் விவரித்தாலும் அவரது உயரிய குண நலன்களை பூர்ணமாக எடுத்துரைத்ததாக ஆகாது. அவர் ஸித்தியடைந்தது நமக்கெல்லாம் ஒரு பெரிய இழப்புத்தான். நான் சாதுர்மாஸ்ய விரதம் மேற்கொண்ட பூனா நகரத்திலிருந்து விரைந்து வந்தது உங்களுக்குத் தெரியும். எனக்கு ஸந்யாச தீக்ஷை கொடுத்து கமண்டலத்தையும் அருளின அதே இடத்தில், அதே கமண்டலத்தால் அவர் உடலுக்கு அபிஷேகம் செய்ய நேரிட்டபோது, என்னதான் முயன்றும் என் துயரத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ரொம்பவும் சிரமப்பட்டு என்னை கட்டுப்படுத்திக் கொண்டேன்.

"இந்த சரீரம் மரிக்கும் போது உங்கள் துயரம் தாள முடியாமல்தான் இருக்கும் என்பதை நான் அறிவேன். ஆனால், (மாமிஸ பிண்டங்களான) எல்லா சரீரங்களுமே அந்த கதியை அடைய வேண்டியதுதான்" என்று நம் குரு என்னிடம் சொல்லியிருக்கிறார். இதையேதான் ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ சுவாமிகள் அவருடைய சிஷ்யர் ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ சுவாமிகளுக்கும் கூறினார். நம் குருவின் பிரத்யக்ஷ சரீரம் இல்லாமை நம்மை வெகுவாகப் பாதிக்கத்தான் செய்கிறது. மஹான் பாணபட்டர் ஓரிடத்தில், "பகவத் ஸங்கல்பத்துக்கு முன்னால் நாம் சக்தியற்றவர்களாகவே இருக்கிறோம்" என்று கூறுகிறார். இந்த மாதிரி நினைத்துத்தான் நாம் நம்மைத் தேற்றிக்கொள்ள வேண்டும். ஸ்ரீ சாரதாபரமேச்வரியின் அருளாலும் நம் குருநாதரின் அனுக்ரஹத்தாலும் அவர் நமக்கிட்ட கடமைகளைச் சரிவரச் செய்வதே நாம் அவர் நினைவுக்குச் செய்யும் சேவையும் அஞ்சலியுமாகும்.

ஹர நம: பார்வதீ பதயே : ஹர ஹர மஹாதேவக || ஜானகீகாந்தஸ்மரணம் ; ஜய ஜய ராம ராம ||


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# விஷ்ணு ஸூக்தம்

ரிக் வேதம்




1. யார் பூமியையும் அதிலுள்ள அனைத்தையும் உருவாக்கியுள்ளாரோ, மேலே உள்ள விண்ணுலகைத் தாங்கியுள்ளாரோ, மூன்றடியால் மூன்று உலகங்களையும் அளந்தாரோ, சான்றோரால் போற்றப்படுகிறாரோ அந்த விஷ்ணுவின் மகிமை மிக்க செயல்களைப் போற்றுவோம்!


2. யாக மண்டபத்தின் வாசல்படி விட்டமே, நீ விஷ்ணுவின் நெற்றியாக விளங்குகிறாய், பின்புறமாக இருக்கிறாய். வாசற்கால்களே, நீங்கள் அவரது இரண்டு கால்களாக உள்ளீர்கள். கயிறே, நீ அவரது நாடிகளாக இருக்கிறாய். முடிச்சுகளே, நீங்கள் விஷ்ணுவின் முடிச்சுகளாக இருக்கிறீர்கள். யாக மண்டபமே, நீ விஷ்ணு மயமாகவே இருக்கிறாய். விஷ்ணுவின் அருளைப் பெறுவதற்காக உன்னை வணங்குகிறேன்!

3 .எங்கே தேவர்கள் மகிழ்கிறார்களோ, எங்கே மனிதர்கள் போக விரும்புகிறார்களோ, எது விஷ்ணுவின் மனத்திற்கு உகந்த இருப்பிடமோ, எங்கே அமுதத் தேனூற்று பெருகுகின்றதோ விஷ்ணுவின் அந்த மேலாம் திருவடிகளை நான் அடைவேனாக!

4. மலைமீது திரிகின்ற பெரிய யானைபோல் சுதந்திரமான வரும், மூன்று பெரிய அடிகளுள் எல்லா உலகங்களையும் அடக்கிய வருமான அந்த விஷ்ணுவை அவரது மகிமைக்காகப் போற்றுவோம். எம்பெருமானே, உமது திருமேனி அளவில் அடங்காதது, உமது மகிமை அறிய முடியாதது.

5. உமது மணம் நிறைந்ததான பூமி மற்றும் விண்ணுலகம் இரண்டையே நாங்கள் அறிவோம். ஒளி பொருந்திய திருமாலே, நீர் மட்டுமே மேலான உலகை அறிவீர். இந்த பூமியில் நீர் நடந்து, அதனை இருப்பிடமாகக் கொள்வதற்கு மனிதர்களுக்குக் கொடுத்துள்ளீர்.


(தொடரும்…)



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita





## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

### 1. பகுத்தறிவு (விவேகம்)



ಶ್ರೀ ಶೃಂಗೇರಿ ಜಗದ್ಗುರು ಶ್ರೀ ಚಂದ್ರಶೇಖರ ಭಾರತಿ ಸ್ವಾಮಿಗಳವರು
ಮತ್ತು ತತ್ಕರಕಮಲಸಂಜಾತ ಶ್ರೀ ಅಭಿನವ ವಿದ್ಯಾತೀರ್ಥಸ್ವಾಮಿಗಳವರು

மேலே நாம் கூறிய சுலோகத்தின் (விவேக சூடாமணி க. 20) பொருளை நன்கு சிந்தித்தால், நித்ய-அநித்ய வஸ்து விவேகத்துக்கும் புலனடக்கத்திற்கும் உள்ள தொடர்பு விளங்குகிறது. புலன் நுகர்ச்சியால் கிடைக்கும் இன்பம் நிலைத்து நிற்பதில்லை; மனிதனுக்கு ஒரு சமயத்தில் இன்பம் விளைவிக்கும் பொருளை வேறொரு சமயம் அதே மனிதன் வெறுக்கிறான். இன்னமும் சொல்லப் போனால். உலகம் என்ற தவறான அடிப்படையைக் கொண்டு நுகரப்படும் இன்பம், உண்மையில் துன்பத்தையே விளைவிக்கிறது என்றும் தீர்மானம் செய்யலாம். எனவே தான், பகவத்பாதர் தாம் எழுதிய பகவத் கீதா பாஷ்யத்தில் புலனடக்கம் உள்ளவனை "விவேகி" என்றும் அது இல்லாதவனைப் பசு போன்ற பிராணிகளுக்குச் சமமானவன் என்றும் கூறுகிறார்:.

ये हि संस्पर्शजा भोगा दुःखयोनय एव ते । आद्यन्तवन्तः कौन्तेय न तेषु रमते बुधः ॥

(புலன்களுக்கு விஷயமாகும்) பொருட்களை நுகர்வதால் பிறக்கும் இன்பம் உண்மையில் துன்பமே. குந்தியின் மைந்தனே! அவற்றுக்குத் துவக்கமும் முடிவும் உண்டு. விவேகம் உள்ளவன் இவற்றில் இன்பம் துய்க்க மாட்டான்.)

பகவத்பாதரின் பாஷ்யம்: புலன்களுக்கும் அவற்றுக்கு விஷயபாகும் பொருட்களுக்கும் உள்ள தொடர்பினால் பிறக்கும் இன்பங்கள், அவித்யையினால் ஏற்படுவதால், துன்பத்தையே விளைவிக்கின்றன ... இந்த ஸம்ஸாரத்தில் (பிறப்பு-இறப்பு சுழற்சியில்) உண்மையான இன்பம் ஒரு துளியும் கிடையாது என்பதை அறிந்து, ஒருவன் புலன்களைக் கானல் நீரான பொருட்களிலிருந்து விலக்க வேண்டும்." (இவ்வின்பங்கள்) துன்பத்தை விளைவிக்கின்றன; தவிரவும், அவற்றுக்குத் துவக்கமும் முடிவும் உண்டு. புலன்களுக்கும் பொருட்களுக்கும் இடையே ஏற்படும் தொடர்பு துவக்கம்'. அத்தொடர்பின் நீக்கமே 'முடிவு'. எனவே, அவை அநித்யமானவை ...குந்தியின் மைந்தனே! விவேகம் உள்ளவன் -

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

பரம்பொருளின் தத்துவத்தை அறிந்தவன் - இந்த இன்பங்களைத் துய்க்க மாட்டாள். (உலகில்) கடைந்தெடுத்த மூடர்களே பசு முதலான பிராணிகளைப் போல் இவ்வின்பங்களைத் துய்ப்பது காணப்படுகிறது.

இப்படிப்பட்ட புலனடக்கம் ஆசார்யாளுக்குச் அமைந்திருந்தது. ஆசார்யாள் சிருங்கேரியில் மாணவராகச் சேர்ந்த போது அவருக்கு வயது பதின்மூன்று. அவருக்குக் கல்விப் பயிற்சி சிருங்கேரியில் உள்ள நரசிம்ம வனத்தில் நடைபெற்றது. அப்போது அவருடைய சமவயதில் உள்ள மாணவர்கள் சிலரும் அவருடன் கல்வி பயின்றனர். ஆசார்யாளின் விவேகமும் புலனடக்கமும் எம்மாதிரி இருக்கிறது என்பதை ஜகத்குரு ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவ்வப்போது சோதிப்பார்கள் என்று அச்சமயம் அம்மாணவர்களுக்குக் கல்வி கற்பித்த ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் (ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள்) கூறுகிறார்:

“... சில சமயத்தில் ஸந்நிதானம் (ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்) பையன்களிடம் குசலப் ப்ரச்னம் பண்ணுவார்கள். ஸாதாரணமாகக் கேட்பது போல், 'இன்று சமையலெல்லாம் நன்றாயிருந்ததா? என்ன சமையல் செய்திருந்தார்கள்? வாய்க்கு ருசியாக இருந்ததா? உப்பு ஜாஸ்தியா? உறைப்பு ஜாஸ்தியா?' என்றெல்லாம் பாமர ஜனங்கள் கேட்பது போல் கேட்டு விடை தெரிந்து கொள்வார்கள். அவரது அந்தரங்க நோக்கம் இன்னது என்று தெரியாத வெகுளிகளான மற்ற பையன்களெல்லாம் வாயில் வந்ததை உளறிவிடுவார்கள். ஸ்ரீனிவாஸன் மட்டும் பேசாமல் இருப்பாள். 'சாப்பாட்டு விசாரத்தைப் பற்றிக் கேட்டால் நீங்கள் எல்லோரும் நன்றாகப் பதில் அளிக்கிறீர்களே, ஸ்ரீனிவாஸன் ஏன் வாயைத் திறக்கவே இல்லை?' என்று கேட்பார்கள். ஸ்ரீனிவாஸனோ, 'எல்லாம் குருப்ரஸாதம் தான். குருப்ரஸாதம் எப்போதுமே நன்றாகத் தான் இருக்கும்' என்று பதிலளிப்பான். ... 14 வயதுச் சிறுவனுடைய விவேகமும் வைராக்கியமும் இவ்விதம் எல்லோரும் பார்த்து அதிசயிக்கும்படி அஸாதரணமாகவே அமைந்திருந்ததை இதனால் வாசகர்கள் தெரிந்துகொள்வார்கள் என்பதில் ஸந்தேஹம் இல்லை..."

ஆசார்யாள் துறவறம் மேற்கொண்ட பின், புலனடக்கமும் வைராக் கியமும் அவரிடத்தில் எப்படி பரிமளித்தன என்பதை இக்கட்டுரையில் பின்னர் பார்ப்போம். மேலே கூறியதன் தொடர்ச்சியாக, ஒரு நிகழ்வை மட்டும் இப்பொழுது கூறுவோம்:

"... ஆசார்யாள் தாம் உண்ணும் போது, உணவாகப் பரிமாறப்பட்ட எல்லாவற்றையும் கலந்து ஒன்றாக உண்ணுவார். நாச்சுவைக்கு அடிமையாகக் கூடாது என்பதற்காக அவர் இப்படி உண்ணுவது வழக்கம். ஒரு சமயம் அவருடைய குரு இதைக் கவனித்து அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும் எல்லோரும் உண்ணுவதைப் போலவே ஆசார்யாளும் உண்ணலாம் என்றும் கட்டளையிட்டார் ...” (தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ

### ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் - 3

### இல்லற தர்மம்

ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யார் எட்டாவது வயதில் பிரஹ்மசர்யத்திலிருந்தே ஸன்யாஸியாகி விட்டபடியால் அவருடைய சரித்திரத்தில் இல்லற தர்மத்தை எடுத்துச் சொல்ல அவகாசமில்லை. இதற்காக ஸ்ரீமாதவாசார்யார், தான் எழுதியிருக்கும் ஸ்ரீ சங்கர விஜயத்தில் சுருக்கமாக ஆதி ஆசார்யாரின் பெற்றோர்களான சிவகுரு, ஆர்யாம்பாள் இவர்களுடைய விவாஹத்தை வர்ணிக்கும்போது ஸம்பந்திகளின் மனோபாவம் எப்படியிருக்க வேண்டுமென்பதையும் நல்ல சிரத்தையும் படிப்பும் ஐஸ்வரியமும் உள்ள தம்பதிகள் எவ்விதம் நித்யகர்மானுஷ்டானத்திலும் யக்ஞயாகாதிகளைச் செய்வதிலும் சாஸ்த்ரோக்தமான மற்ற கார்யங்களை நிறைவேற்றுவதிலும் ஊக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதையும் நன்கு காட்டியிருக்கிறார். அந்த அழகான காவியத்தின் உபநாயகராகிய விசுவரூப மண்டனமிச்ரருக்கு உபயபாரதியை விவாஹம் செய்து கொடுத்ததை 3வது ஸர்க்கத்தில் வர்ணிக்கையில், விவாஹமான பிறகு கிரமப்படி நான்கு நாட்கள் அக்னிகார்யங்களை நடத்திவிட்டு மாப்பிள்ளை பெண்ணை அழைத்துக்கொண்டு தன் கிருஹத்திற்குப் புறப்படும்போது, அவளுடைய பெற்றோர்கள் சொல்வதாகச் சில வசனங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் இக்காலத்திலும் உபயோகப்படக்கூடிய லௌகிக ரீதியில் அமைந்திருப்பதினால் அவைகளை மாத்திரம் இங்கு எடுத்தெழுத உத்தேசிக்கிறேன்.

முதலில் மாப்பிள்ளையிடம் அவர்கள் "இவள் சிறு குழந்தை போலுள்ளவள். இவளுக்கு ஒன்றும் தெரியாது. பந்து முதலானவைகளை வைத்துகொண்டு மற்றக் குழந்தைகளோடு விளையாடிக்கொண்டிருப்பாள். பசி ஏற்பட்டால்தான் வீட்டுப்பக்கம் திரும்புவாள். அப்பொழுதும் வெகு வருத்தத்துடனேயே திரும்புவாள்.

இவள் எங்களுக்குள்ள ஒரே செல்வக் குழந்தையானதினால் இவளை வீட்டுவேலை செய்யும்படி நாங்கள் சொன்னது கிடையாது. உங்கள் வீட்டுப் பெண் மாதிரியே இவளை கவனித்துக் காப்பாற்ற வேண்டும். இவளை ஏதேனும் காரியம் செய்யும்படி ஏவுகிறதானால் மிருதுவான வார்த்தைகளினாலேயே ஏவ வேண்டும். கடுமையான வார்த்தைகளை உபயோகிக்கக்கூடாது. இவளுக்குக் கோபம் வந்தால் செய்யவேமாட்டாள். சிலர் மிருதுவான வார்த்தைக்குக் கட்டுப்படுவார்கள். இதற்கு மாறுதலான ஸுபாவத்துடன் சிலர் இருப்பார்கள்.

ஸுபாவத்தை மீறுவதற்கு யாராலும் முடியாதல்லவா? மருமகளுடைய ரக்ஷணம் மாமியாரின் அதீனமாக இருப்பதால், அவளிடத்தில் நாங்கள் சொன்னதாகச் சொல்லுங்கள். இந்தப்பெண் உங்களிடம் அடைக்கலமாக வைக்கப்பட்டிருக்கிறாள். இவளை உங்கள் வீட்டு வேலைகளை மெள்ள மெள்ளச் செய்வியுங்கள். இளம் பர்வத்தில் பாலர்களுக்குத் தவறுதல் ஏற்படுவது ஸஹஜம். அதை வீட்டிலுள்ள பெரியோர்கள் பெரிதாக நினைக்கக் கூடாது. நாமும் கொஞ்சம் கொஞ்சமாய் நல்ல அறிவுள்ளவர்களாக ஆகி பின்னால் அல்லவா பெரியோர்களாக ஆகியிருக்கிறோம்?" என்று சொல்கிறார்கள்.

பிறகு பெண்ணைப் பார்த்து அவள் பர்த்தாவின் கிருஹத்தில் நடந்துகொள்ள வேண்டிய விதத்தை உபதேசிக்கிறார்கள். "குழந்தாய்! இதுவரையில்லாத புது நிலைமையை நீ இப்பொழுது அடைந்திருக்கிறாய். அதை எப்பொழுதும் நன்கு காப்பாற்றிக் கொள்வதற்குள்ள ஸாமர்த்திய புத்தியுடன் இருந்துவா. ஜனங்கள் பார்த்து பரிஹாஸம் செய்யக்கூடிய எவ்விதக் குழந்தைத்தன சேஷ்டையையும் செய்யாதே. அதைக்கண்டு நாங்கள் (பெற்றொர்கள்) ஸந்தோஷிக்கிறமாதிரி மற்றவர்கள் ஸந்தோஷிக்க மாட்டார்கள். பர்த்தாவை அடைவதற்கு முன்னால் தாயார், தகப்பனார் பெண்ணுக்கு மேலதிகாரிகளென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பிறகோ பர்த்தாதான். அவரையேதான் சரணமாக அடையவேண்டும். அவ்விதமிருந்துவந்தால் மிகவும் சிரமப்பட்டு ஸம்பாதிக்கக்கூடிய இருலோகங்களையும் ஜயித்தவளாவாய். பர்த்தா போஜனம் செய்யாமலிருக்கும்போது நீ சாப்பிடாதே; அவர் அயலூருக்குப் போயிருக்கும்போது அலங்காரம் செய்துகொள்ளாதே. ஸ்நானம் முதலானதுகளில் கூட முன் பின் முதலான நியமங்கள் உண்டு. அங்குள்ள வயதான ஸ்த்ரீகளின் நடத்தையே இவ்விஷயங்களில் பெரிய பிரமாணமாகும். பர்த்தா கோபித்துக்கொண்டால் அப்பொழுது நீயும் கோபத்துடன் ஒரு வார்த்தை கூடச் சொல்லக்கூடாது. எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு தான் இருக்க வேண்டும். அப்படி இருந்து விட்டால் அவருடைய கோபமும் தானாக அடங்கிவிடும். அவர் உன்னிடம் ப்ரஸன்னமான முகத்துடன் இருக்கும்போது உனக்கு வேண்டியதைச் சொல்லிக்கொள். ஆனால் சொல்லும்போது உத்தண்டமாயிராமல் பயந்தவள்போல ஸங்கோசப்பட்டுச் சொல். வேண்டியதை எல்லாம் பொறுமையினாலேயே ஸாதிக்கலாம். பர்த்தா கூடவிருக்கும்போதுகூட வேறு புருஷர்களிடம் பேசும் ஸந்தர்ப்பம் ஏற்பட்டால், அவர்கள் முகத்தை நிமிர்ந்து பார்த்துக்கொண்டு பேசாதே. அப்படியிருக்கையில் அவர்களிடம் தனித்துப் பேசக்கூடாதென்று உனக்கு உபதேசம் செய்யவா வேண்டும்? பர்த்தாவிற்கும் பார்யைக்கும் ஏதேனும் ஸந்தேஹம் ஏற்பட்டுவிட்டால் அபிமானத்திற்கே ஹானியேற்படும்." (தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஸ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

### (ஸ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

(ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)

हंसेरेव परैः सेव्या नाहमन्यैर्जनैरिति ।
प्रबोधनकृते मातर्हंसं वाहं करोषि किम् ।।
ஹம்'ஸேரேவ பரை: ஸேவ்யா நாஹமன்யைர்ஜனைரிதி |
ப்ரபோ³த⁴னக்ரு'தே மாதர்ஹம்'ஸம்' வாஹம்' கரோஷி கிம் ||

தாயே ! "மேலான ஹம்ஸர்களால் (துறவிகளால்) மட்டும் நான் ஸேவிக்கப் பெறுபவள், மற்றவரால் அல்ல என உணர்த்துவதற்காக ஹம்ஸத்தை (அன்னப் பறவையை) வாகனமாகக் கொண்டுள்ளாயோ? (ஹம்ஸ வாஹனக்காட்சி (11)

हंसे हि शब्दे किमु मुख्यवृत्त्या स्थिताऽहमेवेति विबोधनाय ।
विभासि हंसे जगदम्बिके त्वमित्यस्मदीये हृदये विभाति ।।
ஹம்'ஸே ஹி ஶப்³தே³ கிமு முக்²யவ்ரு'த்த்யா ஸ்தி²தா(அ)ஹமேவேதி விபோ³த⁴னாய |
விபா⁴ஸி ஹம்'ஸே ஜக³த³ம்பி³கே த்வமித்யஸ்மதீ³யே ஹ்ரு'த³யே விபா⁴தி ||

உலகின் தாயே | 'ஹம்ஸ' என்ற சொல்லிற்கு நேரிடைப் பொருளானதில் நான் உள்ளேன் என்பதைக் காட்ட ஹம்ஸத்தின் (அன்ன பட்சியின்) மீது காணப்படுகிறாய் என் உள்ளத்தில் புலப்படுகிறது. (ஹம்ஸ என்ற சொல்லின் நேரிடைப் பொருள் அன்னப் பறவை. அதுபோல நடை முறையை அமைத்துக் கொண்டதால் துறவிகளில் சாராரை ஹம்ஸர்கள் என்பர்) (12)

हंसोऽप्यहं स इति बोधमवाप्य मुक्तिं प्राप्तः परस्तव पदाम्बुजसंश्रयाद्यत् ।
तस्मात्तवाम्ब पदयुग्ममयं मुमुक्षु -हंसः समाश्रयति वाहनतामवाप्य ॥
ஹம்'ஸோ(அ)ப்யஹம்' ஸ இதி போ³த⁴மவாப்ய முக்திம்' ப்ராப்த: பரஸ்தவ பதா³ம்பு³ஜஸம்'ஶ்ரயாத்³யத் |
தஸ்மாத்தவாம்ப³ பத³யுக்³மமயம்' முமுக்ஷு -ஹம்'ஸ: ஸமாஶ்ரயதி வாஹனதாமவாப்ய ||

பரமஹம்சர் என்ற துறவியும் உன் திருவடிகளைச் சார்ந்ததால் 'அஹம் ஸ:' 'நானே அவர்' (அஹம் ப்ரம்ஹ அஸ்மி) என்ற உணர்வைப்பெற்று முக்தியடைந்தார் என்பதால் தானும் முக்தி பெற விரும்பிய இந்த ஹம்ஸமும் உன் வாகன நிலைபெற்று உன்னைச்சார்ந்துள்ளது. (13)

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

(ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)

அத்தியாயம் : நான்கு

சைத்ர மாதத்தில் இராமாயணத்தைக் கேட்பதால் ஏற்படும் பலன்: கலிகன்-உத்தங்கன் வரலாறுகள்

எவன், பிறர் தன்னை அடிக்கடி இழித்துக் கூறுவதைக் கேட்டும் பொறுமையுடன் இருக்கிறானோ. அவனை உத்தமமான மனிதன் என்று கூறுகிறார்கள். அவனே பகவான விஷ்ணுவுக்குப் பிரியமானவன் என்றும் கூறப்படுகிறான். பிறர் நலனில் அக்கறை கொண்டவர், ஒருவன் தன்னை அழிக்க வரும் சமயத்திலும் அவனிடம் விரோதம் கொள்வதில்லை. சந்தன மரத்தை வெட்டும் கோடரியை அது பழிதீர்த்துக் கொள்வதில்லை; மாறாக, அதன் முனையில் நறுமணத்தைப் பூசிவிடுகிறது. அட! என்ன கஷ்டம்! விதி மிகவும் பலம் வாய்ந்தது. மக்களைப் பலவிதங்களிலும் தாக்கித் துன்புறுத்துகிறது.



மக்களுடைய உறவைத் துறந்து வசிப்பவனும்கூட, தீயவர்களால் துன்புறுத்தப்படுகிறான். எந்தக் குற்றமும் செய்யாதவனையும் கூட இவ்வுலகில் தீயோர்கள் கஷ்டப்படுத்துகிறார்கள். செம்படவர்கள். கோள் சொல்பவர்கள், வேடர்கள் ஆகியோர், இவ்வுலகில் காரணம் ஏதுமில்லாமலே மற்றப் பிராணிகளிடம் பகைமை பாராட்டுகிறார்கள். ஆகா! மாயைக்குத்தான் எவ்வளவு ஆற்றல்! உலகத்திலுள்ள அத்தனை மக்களையும் மயக்கிவிடுகிறது! புதல்வன், நண்பன், மனைவி முதலியோர்கள் மூலம் எல்லாவிதமான துக்கங்களிலும் ஆழ்த்திவிடுகிறது.

பிறர் பொருளைத் திருடி, ஒருவன் தன் மனைவி-மக்களைப் போஷிக்கிறான். ஆனால், அவனுக்கு என்ன லாபம்? கடைசியில், தன்னந்தனியனாக மேலே போகிறான். அவன் எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தன்னந்தனியாக இறக்கிறான்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

என்னுடைய தாய், என்னுடைய தந்தை, என் மனைவி, என் குழந்தைகள், என் சொத்து - என்று. இம்மாதிரியாக மமகாரம் மனிதர்களை வாட்டி வதைக்கிறது அவன் உயிருடன் இருக்கும்வரை. செல்வம் சம்பாதித்து உறவினர்களுக்குத் தாராளமாகக் கொடுத்துவரும் காலம் வரையில், அவர்கள் இவனிடம் ஒட்டிக்கொண்டு சுகத்தை அனுபவிப்பார்கள். ஆனால், முறைகேடான வழிகளில் பணம் சம்பாதித்ததின் பயனான பாவங்களை இவன் மட்டுமே அனுபவிக்கிறான்" என்று அந்த உத்தமர் சொன்னதைக் கேட்டு. மனத்திற்குள் ஆலோசித்துப் பார்த்து, மனம் பதறி, கைகளைக் கூப்பிக் கொண்டு 'மன்னிக்க வேண்டும், மன்னிக்க வேண்டும்' என்று பல தடவை கெஞ்சினான், கலிகன்.

அந்தப் பெரியவருடைய கூட்டுறவினாலும், திருமால் சந்நிதி விசேஷத்தாலும், அந்தத் தீயவன் பாவங்கள் ஒழிந்து, மிகவும் பச்சாதாபப்படத் தொடங்கினான். நான், கணக்கில்லாமல் மாபெரும் பாவங்களைச் செய்திருக்கிறேன். அந்தணோத்தமரே! தங்களைப் பார்த்தவுடனேயே அவைகள் எல்லாம் மறைந்து போய்விட்டன. ஐயனே! என்னுடைய அறிவு எப்போதும் பாவத்தையே சிந்தித்துக் கொண்டிருந்தது. எப்போதும் பாவச் செயல்களையே செய்து கொண்டிருந்தேன். எனக்கு எவ்வாறு மேன்மை ஏற்படும்? நான் யாரை அடைக்கலம் புகவேண்டும்?

முற்பிறவிகளில் செய்த பாவங்களின் பயனாக, இப்பிறவியில் தீயகுணங்களை உடையவனானேன். இந்த ஜன்மத்திலும் கணக்கில்லாமல் பாவங்கள் செய்திருக்கிறேன். இந்த நிலையில், இனி எனக்கு என்ன கதி கிடைக்கப் போகிறதோ? மகாத்மா (வாகிவிட்ட) கலிகனிடமிருந்து இந்தச் சொற்களைக் கேட்ட உத்தங்கர் என்ற அந்தணாளர். பின்வருமாறு கூறினார்.

உத்தங்கர் கூறுகிறார்- பேரறிவாளனே! நன்று, மிக நன்று. உன்னுடைய அறிவு தெளிவும் பிரகாசமும் பெற்றுவிட்டது. அதனால்தான், உலக வாழ்க்கை என்னும் தீராத்துன்பத்தை நீக்கும் வழியைத் தெரிந்துகொள்ள விரும்புகிறாய். சைத்ர மாத வளர்பிறையில் ஒன்பது நாட்கள், பக்தி-கவனத்துடன் இராமாயணம் கேட்க வேண்டும். அதைக் கேட்டமாத்திரத்திலேயே மனிதன் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான். (உத்தங்கரின் உபதேசத்தைக் கேட்ட) அந்த விநாடியிலேயே கலிகன் என்ற அந்த துஷ்டன் பாவங்கள் நீங்கப் பெற்று. இராமாயணத்தைக் கேட்டு, உடனேயே மரணம் அடைந்தான்.
உயிரிழந்து தரையில் வீழ்ந்துவிட்ட (முன்னாள்) துஷ்டனைக் கண்டு, கருணையுள்ள உத்தங்கர் மிகவும் வியப்படைந்து பகவான் ஸ்ரீஹரியைத் தோத்திரம் செய்தார். (தொடரும்...)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்